உ

கடவுள் துணை.

விச்சித்திர

# ஜெகஜாலக்கண்ணாடி.

எட்டாம்பாகம்.

—(*)—



இவை-செஞ்சி

ஏகாம்பரமுதலியாராலியற்றப்பட்டு.

ஆதிபுரி.

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1895.

௨

கடவுள்துணை.

# விச்சித்திரஜெகஜாலக்கண்ணாடி.

———(*)-[*]-(*)———

## காப்புவிருத்தம்.

சித்தர்கள்செய்துவைத்த ஜெகஜாலவித்தையெல்லாம்
இத்தரைமீதில்யானும் யெழுதினேன்யெவருங்காண
முத்திக்குமுதல்வனான மூக்கணர்யீன்றெடுத்த
அத்திமாமுகவன்பாதம் அன்புடன்துதிசெய்வோமே.

## தீயில்குதிக்குஞ் ஜாலம்.

பேமனுடஅககினியை மதியாவித்தை
 யியம்புகிறேன் யெல்லோரும்ஆச்சரிக்க
நாமெனவேசங்கனிட புதாருதன்னில்
 நலமாகபூத்திருக்குங் காளான்தன்னை
சோமெனவேகொண்டுவந்து புதுபாண்டத்தில்
 சுருக்குடனேபோட்டுநீ கதிர்முன்வைக்க
ஆமப்பாதைலமது வுருகும்பாரு
 அதையெடுத்து பூசிதீயிலகுதிக்கலாமே.

(வ-ம்) சங்கன்செடிபுதாரில் பூத்திருக்குங் காளானைகொண்டுவந்து புதுபாண்டத்தில்போட்டு வெய்யலில்வைத்தால் தைலம்போல வுருகிவிடும் அதையெடுத்து திரேகம் ஆத்தியந்தமும் பூசிக்கொண்டு எவ்வளவு அனல் யிருந்தபோதிலும் தீயில்குதிக்கலாம்.

கூஅ

## ஒருவனை தும்பலுங் குசுவும்விடும்படி செய்யுஞ்ஜாலம்.

நினைத்தபடி குசுவும் தும்பலும்விடவேவேணும்
 நீயதற்குமாற்றுடனே சொல்லக்கேளு
கருத்தமதொருகண்டக்காய் வேருமப்பா
 கண்மணியேயானையுட திப்பிலிசேரு
மனதிலொருமயக்கமது வைத்திடாமல
 மறவாமல்யிவைரெண்டும் காயம்செய்து
யெனமாககாத்துவரும் வாட்டந்தன்னில
 யெடுத்துதூவகுசுவதும் பல்விடுவார்தானே.

(வ-ம்) சுண்டக்காய்வேரும்ஆனை திப்பிலியும்யிரண்டுஞ்சேர்த்து வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டுசபையில் நாவிவிட்டால் அதனெடி நாசியில்யேறினவர்களெல்லாம் குசுவும் தும்பல்விடுவார்கள். ௬௬

தண்ணியில்சீட்டு எழுதிபோட்டால் சுழலும்ஜாலம்.

கடகடென்று குடல்நடுங்குஞ் ஜாலங்கேளு
  கலியொகமாந்தரெல்லாந் திகைத்துநிற்க
மடமடென்றுசீட்டுதனை யெழுதிநீதான்
  மைந்தனேசலமீதில் போட்டையானால்
படபடென்றுசுத்துமப்பா காதிலுள்ள
  பக்குவமாய்குரும்பிதனை தடவிவிட்டால்
விடவிடென்று ஜெனங்களெல்லாம் நடுநடுங்கி
  வேண்டுவார்மந்திரமென்று வணங்குவாரே.

(வ-ம்) பத்துசீட்டுயெழுதி எதாவது ஒருசீட்டில் காதுகுரும்பிரண்டுபக்கந் தடவிவிட்டால் கிருகிருவென்றதாக சுழலும் நீ நாட்டுங்கொண்டசீட்டில் தடவிவிடலாம் ௱

மோடிவித்தைகாட்டுஞ் ஜாலம்.

மோடியென்றால்செகச்சால மோடிகேளு
  முன்னமேகல்லின்மேல் சொல்லக்கேளு
தேடியேபடிகாரங் கொண்டுவந்து
  தம்பிஅடே அனல்காட்டி வுருகும்போது
நாட்டப்பாருபாயை அதன்மேல்வைத்து
  நலமாகசுத்திவரும் பிசுனைவாங்கு
கேட்டவர்கள்ஆருகில் யிருந்தபோதும்
  கண்மணியேயெடுக்கபந்தயம் கட்டிக்கொள்ளு

(வ-ம்) படிகாரத்தை கல்லின்மேல்வைத்து அனல்காட்டி ரூபாயைஒட்டிவிட்டால் யெவரும் யெடுக்கமாட்டார் நெருப்புபடிகாரத்திற் படக்கூடாது அதற்குமுரிப்பு ஒருவருக்குந் தெரியாமல் ஜலத்தில்கையைதொவித்து எடுத்தால் வந்துவிடும்.

கைகெடியாரம் சொன்னபடி கேழ்க்குஞ்ஜாலம்.

கெடியாரம்போவென்றால் போகவேணும்
  போகாமல்நில்லென்றால் நிற்கவேணும்
கடினமல்லகாந்தகல்லை கையில்வைத்து
  காட்டப்பா கெடியாரம் ஓடாதப்பா

தடைகட்டுயென்றுமிக ஆச்சரிக்க
 தம்பியடேகாந்தமதை யெடுத்தாலுடும்
குடல்நடுங்கி மந்திரக்காரனென்று
 குவலயத்தில்உனைமதிப்பார் செய்துபாரே.

(வ-ம்) கைகெடியாரத்தை கையில்வைத்துக்கொண்டு காந்தமாவது காநதக்கல்லாவது கையில்வைத்து போகுதாவென்று கேட்டால் இல்லையென்பார்கள் காந்தத்தைமறைத்துவிட்டு மறுபடியும் போகுதாவென்றுகேட்டால் போகுதுயென்று சொல்லுவார்கள் மகாமந்திரம்யென்று ஆச்சரியப்படுவார்கள். ௱உ

{ சபையில் ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்தால் விகாரமாய்க்காட்டுஞ் ஜாலம். }

சபைதனிலேஉளளவர்கள் மிரண்டோட
 சாத்திரியமானவொரு ஜாலஞ்சேளு
ஸ்பிரிட்டுஒயின்பாயிண்டு அரைவாங்கிக்கொண்டு
 பிரியமாய்கொதிக்கவைத்து சொல்லக்கேளு
கப்பென்றுமனங்கலங்க திகைத்துநிற்க
 கறிவுப்பைபிடிஅள்ளி போட்டையானால்
யெப்படிதெய்வமே யென்றுசொல்லி
 யேங்குவார்சபையைவிட்டு ஓடுவாரே.

(வ-ம்) ஒருபோகணியிலாவது இன்னம்எந்தபாண்டத்திலாவது ஸ்பிறிட்டு ஒயின் அரைபாயிண்டு வாங்கிக்கொண்டுவந்து கொதிக்கவைத்து ஒருபிடிஉப்பை அள்ளிபோட்டால் புகைசொலியும் யெழும்பும் அத்தருணத்தில் ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்தால் அகோரரூபமாய்த் தோணும் ௱௩

## தண்ணியின்மேல் விளக்கெரியுஞ்ஜாலம்.

யெல்லோருங்கண்டுகொள்ள ஆச்சரிக்க
 யியம்புகிறேன் இங்கிலீசுஜாலந்தன்னை
சொலலவென்ருல சூக்ஷமப்பாகண்டுகொள்ளு
 சுத்தமாய்ககாட்டிவிட்டேன் வெளியாய்த்தானே
துலலிதமாய்கிளாசுதன்னில தண்ணீர்விட்டு
 துய்யவனேசபையோர்க்கு நன்ருய்க்காட்டி
நல்லதப்பாபொடாசியம் கொஞ்சம்போடு
 நிற்குதப்பாபிரகாசம் சொலிக்குந்தானே

(வ-ம்) சிறியகிளாசிலாவது பின்னம் எந்தபாண்டத்திலாவது சலம்விட்டுசபையோர்களுக்கு நன்றாய்காட்டி யிந்தஜலத்தில் தீபம்காட்டுகிறேன் யென்றுசொலலி பொடாசியம் எனகிறதை கொஞ்சம்போட்டால் குப்பென்றதாக தீபம்போல பிரகாசித்து எரியும் பொடாசியம்வாங்கவேணுமெனறால் ஷாப்பிலகிடைக்கும் மருந்தைவைத்திருக்கும்படியான பத்திரம்கிருஷ்ணயலெண்ணையிற்போட்டு வைத்திருக்கவும்.

ஜலத்தை அலுவாசெய்யுஞ்ஜாலம்.

கட்டப்பாசலத்தையும்நீ கட்டும்வித்தை
காரணமாய்சொல்லுகிறேன் கருத்தாய்கேளு
வாட்டமாய்புதிதான பாண்டந்தன்னில்
வண்மையுடன்நல்லஜலங் கொண்டுவந்து
மாட்டப்பாசிறுகட்டுகொடி யிலையைநீதான்
மாறுமல்புழிஞ்சிசக்கரை கொஞ்சம்சேரு
நீட்டப்பாசபையோர்கரு அலுவாய்தன்னை
நிக்ஷயமாய்அருந்துநீ கொடுக்சலாமே.

(வ-ம்)ஒருபுதியபாண்டத்தில் நல்லஜலங்கொண்டுவரச்சொல்லி அநதஜலத்தை அலுவாசெய்கிறேனென்றுசொல்லி சிறுகட்டுகொடியிலையைகசக்கி கொஞ்சம்சார்விட்டு கொஞ்சம்சாக்கரை சேர்த்து துணிமரவுசெய்து கொஞ்சம்நேரம் பொருத்து காட்டினால் பந்தலையாய்விடும் அறுத்து சபையோர்களுக்கு கொடுக்கலாம் சாதாரணமாய் செய்துதின்றாலுந் தாதுவிர்தியாகும்,

காயிதத்தில பணியாரம்சுடுஞ்ஜாலம்.

பலகாரஞ்சுட்டெடுக்குஞ் ஜாலமப்பா
பாலகனேகடாயிமுதல் பாண்டமல்ல
கலமாககாயிதத்தில் தொன்னைசெய்து
நல்லெண்ணை அதில்விட்டு சொல்லக்கேளு
சொல்லிபதோர்குப்பைமேணி வேரைநீதான்
வுல்லாசமாய்சிறிய துண்டைப்போட்டு
கல்லொன்றும்யில்லையப்பா அடுப்பில்வைத்து
தில்லடிகாளியென்று சுட்டுவாங்கே.

(வ-ம்) காகிதத்தை தொன்னையோல்செய்து நல்லெண்ணை விட்டு முன்பக்குப்பைமேணிவேரை சிறியதுண்டாய்கசக்கி அதில்போட்டுவிட்டு அடுப்பிலவைத்து பலகாரம்சுடலாம் பாசு

## குளத்திலிருந்து விபூதியிடும் ஜாலம்.

கும்மி,

குளத்திலிருந்து விபூதியிடும்ஜாலம
சூறியகாட்டா மணிப்பாலே
கலக்கமில்லாமலே பூசிகுளித்துப்பார்
காட்டலாம்யோகிபோல் நேசர்களே.

(வ-ம்) காட்டாமணிப்பாலேகரந்து விபூதிபோல் திரேகமுழுமையு மிட்டுக்கொண்டு காய்ந்தபிறகு ஒருவருக்கும் தெரியாமலிருக்கும் குளத்தில்குளித்தால் சிவயோகியைப்போலிருக்கும்அனேகர் செய்திருப்பார்கள். ௱௭

## செக்கில்யெண்ணெ வாருமைசெய்யும் ஜாலம்.

சொல்லியநாய்வுரி வேரைத்தூளாக்கி
சுத்தியசெக்கினில் போட்டுவிட்டால்
அல்லும்பகலுமே ஆடினபோதிலும்
அரைக்காண்டியெண்ணெ வாறுது.

(வ-ம்) நாவுரிவேரை தூளாகச்செய்து செக்கு ஆடுகிறபோது அதில் போட்டுவிட்டால எண்ணெவராது.

## சாதம் வேகாமையாயிருக்கும் ஜாலம்.

சோறுவேகாததோர் ஜாலஞ்சொல்வேனிதை
சூக்ஷமப்பாயிதை கேட்டவற்கு
கூரியநிலவேம்பு வேரைகலந்திட
கொஞ்சமும்வேகாது அஞ்யர்களே.

(வ-ம்) நிலவேம்புவேர் கொண்டுவந்து ஒருசிறியதுண்டாய் அரிசி அரிக்கும்போதாவது உலையிலாவது போட்டுவிட்டால்வேகாது, ௱௮

## நெருப்பு கைகளில்வாருஞ் ஜாலம்

கட்டைநெருப்பையுங் கையினுல்வாரலாம்
காளியைப்போலப் புறப்படலாம்
கெட்டியாவுத்தா மணிவேர்கொழுந்தையும்
கையினில்பூசிக்கொள் நேசர்களே.

(வ-ம்) உத்தாமணிவேரும் அதின்கொழுந்தையும் அரைத்து கையில பூசிக்கொண்டு கட்டைநெருப்பை கையிலவாரலாம் சுடாது. ௱௯

### சொம்பில் நிறையஜலம்வூற்றி கவிழ்த்தால் பூமியில்விழாதிருக்கும் ஜாலம்.

சொம்பில்ஒருதுளி குறையாமல்சலம்
சுத்தமுடனே நிரப்பிவிட்டு
கம்பநதிபருளாலே சல்லாகட்டி
கவிழ்த்துகாட்டலாம் நேசர்களே.

(வ-ம்) ஒருசிறியசொம்பாகிலும்பெரியசொம்பாகிலும்கொண்டுவந்து சல்லாதுணியைவாய்கட்டிவிட்டு மேலேங்கையைவைத்துமூடி சல்மலையாளபகவதி தண்ணியை நிறுத்தவேணுமென்று கவிழ்த்து அனைவருக்கும் காட்டலாம். ௱௰௧

### துடப்பம்தண்ணியில் நிற்குஞ்ஜாலம்.

(வ-ம்) துடப்பத்தில் அடியில்அல்ப்பகாத்தியாவது வூசியாவதுகுத்தி தெரியாமைச்செய்து ஆழமுள்ள தண்ணியில்போட்டால் நிற்கும்.

### சாணிஉண்டையில் மெதக்குஞ்ஜாலம்.

தக்கையின்மீதினில் சாணத்தைதபூசவே
தண்ணியில்போட மெதக்குமப்பா
பக்குவமாகநீ செய்தையானால்
பார்த்தவர்நம்புவார் நேசர்களே.

(வ-ம்) பெருந்தக்கையாகயெடுத்து அதின்மீது சாணம்பூசிவைத்துக்கொண்டிருந்து வேறேசாணி வுருண்டையை அனைவருக்கும்காட்டி மரைத்துமேற்படி வுருண்டையைப் போட்டால் மெதக்கும் ௱௰௨

### தீபம்வுற்றிபார்த்தால் வீடெல்லாம் தவளைகாட்டும் ஜாலம்

சொல்லியதவளையின் கொழுப்பெடுத்து
சுத்தமாய்சீலையில் தவட்டிக்கொண்டு
நல்லதுணிழலில் வுலர்த்திகொளுத்திவிட்டால்
நிற்குமேதவளை வீட்டிலெங்கும்

(வ-ம்) தவளைகொண்டுவந்து அதின்கொழுப்பை யெடுத்து ஒருதுலலிதமான சலவைவஸ்திரத்தில் தவட்டி நிழலில்வுலர்த்தி காய்ந்தபிறகு அந்தவஸ்திரத்தை வத்திசெய்து திருவிளக்குயேற்றினால் வீடெங்கும் தவளையாக காண்பிக்கும் பார்த்தவர்ஆச்சரிப்பார். ௱௰௩

நெருப்பில்லாமல் வெண்ணையுருக்குஞ்ஜாலம்.

மந்திரத்தைஒருபோதும் பழிக்கவில்லை
மகாஜாலக்காரர்களை பழிக்கவில்லை
தந்திரமாயின்னமொரு ஜாலங்கேளு
தமயிஅடேவெண்ணையது வுருக்கும்வித்தை
சொந்தமாய்சுண்ணம்பை புதைத்துவிடு
சூக்ஷமாய்வெண்ணையதை வுருக்கலாமே
சிந்தமகிழ்யேகாம்பரம் செய்தஜாலம்
செகமீதிலனைவருக்கும் சொல்லச்சொன்னார்

(வ-ம்) கல்சுண்ணம்பில்பெருங்கட்டியாக நாலைந்துகொண்டுவந்து சாலம் ஆடும்பிடததில துணிமறவுசெய்து முன்னுதாய் பூமியில்புதைத்துவிட்டு ஒருகிண்ணத்திலவெண்ணையைக்கொண்டுவரச்சொல்லி அதன்மேலவைத்து பகவதிவெண்ணை யுருக்கவேணுமென்று சுற்றிலுமசலம்விட்டால் வெண்ணைவுருகிவிடும் யிந்தவிச்சித்திரஜாலம் யாவரும் பார்த்து ஆனந்தமடைவீரென்று சொலலி செஞ்சிஏகாம்பரமுதலியார் பாடலாகச்செய்தார். ௱௰௬

ஆடாதமுனிகளை ஆட்டுஞ்ஜாலம்

ஆடாதமுனிகளெல்லாம் ஆட்டுஞ்ஜாலம்
அபுருபமானவொரு வித்தைகேளு
நாடாதுஅபினிதனை வெத்திலையில்வைத்து
நலமாகவுள்ளுக்கு கொடுத்துவிட்டால
ஓடும்பாவூநடனே யேரும்சொலலும்
உத்தமனேமுடிவுடனே அறுக்கவேணும்
நாடுவார்உனைமதித்து தேடுவார்கள்
நடப்பதெலலாந்தந்திரமப்பா மந்திரமேது

(வ-ம்) ஆடாதமுனிபேய் பிசாசுகளாயிருந்தபோதிலும் வாய்திறவாமையிருந்தபோதிலும் சிறியபாளவு அபினியை வெத்திலையில்வைத்து உள்ளிற்குச் செலுத்தினால உடனே ஊருமப்பரும் சொல்லிவிடும் உடனே முடிஅறுத்துவிட்டால அத்துடனொழிந்துவிடும். ௱௰௭

எட்டாம்பாகம் - முற்றிற்று.

———(*)———

இனி-ஒன்பதாம்பாகம்.